1979 மார்ச் 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் அன்று புதுக்கோட்டை துணைக் காவல் கண்காணிப்பாளர் கிராமத்தில் சோதனை செய்து 16 பேர்களைக் கைது செய்துள்ளார். 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் அன்று இரவு விராலி மலை காவல் நிலையத்தைத் தாக்கும் நோக்கத்துடன் சுமார் 500 பேர்களை விவசாயிகள் திரட்டியுள்ளனர். புதுக்கோட்டை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் போலீஸ் படையுடன் சென்று கூட்டத்தினரைக் கலைந்து போகச் செய்துள்ளார். சென்னை போலீஸ் சட்டம் 30 (2) பிரிவின் கீழ், முன் அனுமதி யின்றி கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்த தடைவிதித்து உத் தரவிடப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டக் காவல் கண்காணிப் பாளரும், புதுக்கோட்டை சப்-கலெக்டரும் கிராமத்தில் முகா மிட்டு நிலைமைகளைக் கண்காணித்தனர். திருச்சிராப்பள்ளி டி.ஐ.ஜியும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரும் விவ சாயிகள் சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்களது குறைகளைக் கேட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் வழக் குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் விவசாயிகள் சார் பாகக்கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர்களது கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். அமைதியாக ஊர்வலம் ஒன்று நடத்த அனுமதி கேட்டனர். ஊர்வலம் நடத்த அனுமதி கொடுக்கப் பட்டது. மாலை சுமார் ஆறு மணி அளவில் சந்தைப்பேட்டை யிலிருந்து தாசர் தெருவரையில் ஊர்வலமாகவந்து அமைதியாகக் கலைந்து சென்றனர். எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் விடப்பட்டனர். நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, மேற்கண்ட பொருள் மீது விவாதிக்க பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : அமைச்சர் அவர்கள் ஜப்தி பண்ணவில்லை என்று சொல்கிறார்கள், அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. அவைகளை அமைச்சர் அவர்களிடம் கொடுக் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

(ஆ) விம்கோ தீப்பெட்டி தொழிற்சாலையில் உற்பத்திக் குறைப்பும், ஆட்குறைப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ''மத்திய அரசு வரி உயர்வு செய்ததினால் விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை நிர்வாகம் உற்பத்தியைக் குறைத்து

500 தொழிலாளர்களை வேலைக்கு எடுக்காததின் காரணமாக எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்று கேட்டு திரு. வி. கே. கோதண்டராமன், திரு. சி. கோவிந்தராசன், திரு. ஆர். உமாநாத், திரு. துரை முத்துசாமி ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான விஷயம் சம்பந்தமாக மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்பதற்காகக்கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானம் இது. மத்திய அரசு விதித்த வரியின் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு விஷயம் இது. தீப்பெட்டிக்கு வரி விதித்ததன் காரணமாகக் கோடிக்கணக்கான மக்கள், கிராமப் புறங்களிலும் சரி, நகர்ப்புறங்களிலும் சரி, கோடிக்கணக்கான மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தீப்பெட்டியைப் பொறுத்தவரையில் நகரப்புறங்களிலுள்ள மக்கள் மட்டுமல்ல, கிராமப் புறங்களிலுள்ள ஏழை எளிய மக்கள் அதிகமாக இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது இதை உற்பத்தி செய்கின்ற தீப்பெட்டி பாக்டரி தொழிலாளர் பிரச்னை இத்துடன் கலந்து வந்திருக்கிறது. விம்கோ பாக்டரிக்கு நாட்டில் பல கிளைகள் இருக்கின்றன. விம்கோ க்ரூப் என்று எடுத்துக் கொண்டால் மொத்தம் 10 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மத்திய அரசால் போடப்பட்ட வரியின் பளு தாங்க முடியாததன் காரணமாகச் சென்னை கிளையில் இப்போது 500 பேர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று நிர்வாகம் மிரட்டிக்கொண்டிருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக 500 பேர்கள் வெளியேற்றப்படுகின்ற சூழ்நிலை இருப்பதால் இங்கு கிளர்ச்சி, வேலை நிறுத்தம் போன்றவை ஏற்படக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இந்த விம்கோ பாக்டரி சுமார் நீண்டகாலமாக மூடப்பட்டு கிடந்தது, இப்போது தான் திறக்கப்பட்டு நடந்து வருகிறது.

எனக்கு இதில் ஒரு வருத்தம் என்னவென்றால், தீப்பெட்டி, மண்ணெண்ணெய் போன்றவைகளுக்கு வரிபோடும் போது என்ன விளைவுகள் ஏற்படும் என்று தெரிந்து இருக்கிற பொழுது, மேற்கு வங்காள முதலமைச்சர் அவர்கள் இந்த வரிவிதிப்பைக் கண்டித்து அறிக்கை விட்டிருப்பதோடு, இந்த வரிவிதிப்பை வாபஸ் வாங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை டெல்லியில் இருக்கின்ற பைனான்ஸ் மினிஸ்டர் சரண்சிங்கைச் சந்தித்து நேரடியாக மெமோராண்டத்தையும் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சனை மிக முக்கியமான பிரச்சனை, கோடிக்கணக்கான மக்களைப் பாதிக்கின்ற விஷயம். ஆகவே, இந்த வரிவிதிப்பு விஷயமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இந்த வரிவிதிப்பைக் கண்டித்து, வேதனை தெரிவித்து ஒரு அறிக்கை விடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அத்துடன் டெல்லிக்குச் சென்றிருந்த போது,

1979 மார்ச் 20] [திரு. ரா. உமாநாத்]

மத்திய நிதி அமைச்சர் அவர்களைச் சந்தித்து இதைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும் என்று வற்புறுத்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். அந்த முறையில் நம்முடைய முதலமைச்சர் கண்டித்து அறிக்கை விடாமல் இருப்பதும், மத்தியநிதி அமைச்சர் அவர்களை நேரடியாகச் சந்தித்து சொல்லாமல் இருப்பதும் வேதனைக்குரிய விஷயம். அதன் விளைவாக இன்றைக்கு பாக்டரி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இந்த முக்கியமான விஷயத்தை விரிவாக விவாதிப்பதற்கு சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை சுவீடன் கோப்ரேஷனோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த பாக்டரியில் 250 பெண்களும், 310 ஆண்களும் இருபது நாட்களுக்கு முன்னால் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய ஜனதா அரசு தீப்பெட்டிக்கு வரி போட்டதின் காரணமாக இந்தத் தொழிற்சாலையை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி மூடப்போவதாகத் தமிழக அரசு நோட்டீஸ் கொடுத்திருப்பதாக அறிகிறேன். நேற்றைய தினத்திலிருந்து, அவர்கள் போராட்டத்தைத் துவங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த பாக்டரி அஸ்ஸாம், அந்தமான் போன்ற இடங்களில் எல்லாம் விம்கோ பாக்டரி இயங்கிக் கொண்டிருக்கிறது. சுமார் 10 ஆயிரம் பேர்கள் இந்தத் தொழிலில ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் தமிழகத்தில் மட்டும் 2,000 பேர்கள் இந்தத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த பாக்டரியில் நிரந்தரமாக்கப்படாத 560 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை காரணமாகத் தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்துவதற்கு இருக்கிறார்கள்.

(முற்பகல் 10–20)

ஆகவே, இந்த அரசு இதைத் தேசீயமயமாக்கி, அரசே எடுத்து நடத்துவதற்கோ அல்லது கூட்டுறவுத் துறையில் இந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்துவதற்கு முன் வந்தால் ஒழிய, அங்குள்ள தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் நிவாரணம் அளிப்பதாக ஆகாது என்று கருதுவதால், இந்த அரசே உடனடியாக இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்க வேண்டுமென்று கூறுகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே இயந்திரம் மூலம் தீப்பெட்டி செய்யப்படுவது 'விம்கோ' கம்பெனியாரின் ஐந்து

தொழிற்சாலைகளில் தான், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், அஸ்ஸாம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இந்தத் தொழிற்சாலைகள் இயங்குகின்றன. இவைகளில் சென்னையில் உள்ள திருவொற்றியூர் தொழிற்சாலையில் சுமார் 1,700 தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள்.

மத்திய அரசு சென்ற நிதி நிலை அறிக்கையில், இத்தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளுக்கு உண்டான வரியை (எக்சைஸ் டியூடி) குரோஸ் ஒன்றுக்கு ரூ. 4.83லிருந்து ரூ. 9.20 ஆக ஏற்றி விட்டார்கள் என்றும், அதே நேரத்தில் குடிசைத் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளின் சுங்க வரி ரூ. 3.36 விருந்து ரூ. 1.60 ஆகக் கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்றும், இதனால், ஏற்படும் விலை வித்தியாசத்தினால் தீப்பெட்டிகளை வெளிச் சந்தையில் விற்க முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாகவும் கூறி, நிர்வாகம் தொடர்ந்து தொழிற்சாலையை நடத்த இயலாத நிலைமை வந்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். வெளிச் சந்தையில், இந்தக் கம்பெனியின் தீப்பெட்டிக்கு கிராக்கி (டிமாண்டு) குறைந்ததால் 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ம் நாள் முதல் 250 தற்காலிக வேலையாட்களும், 50 பயிற்சி பெறுவோர்களும் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். 1979 ம் ஆண்டு மார்ச் திங்கள் 14-ம் நாள் முதல் ஒப்பந்தப்படி வேலை செய்யும் 200 பெண் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்கப்படவில்லை.

இதைக் குறித்து தொழிலாளர் நலத் துறை செயலர் நிர்வாகத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். சுங்க வரியைக் குறைப்பதற்கு மத்திய அரசை வேண்டிக் கொள்ளவும், இங்குள்ள இயந்திரத் தொழிற்சாலையை படிப்படியாகக் குடிசைத் தொழிலாக மாற்றியமைக்கவும் முயற்சி எடுக்கும்படி யோசனை தெரிவித்தார். அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசை அணுகியிருப்பதாகவும், அதன் பயனாக சுங்கவரி ரூ. 9.20 லிருந்து ரூ. 7.20 ஆகக் குறைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இருந்தும், இந்த சுங்கவரி கூட, மிக அதிகமாக இருப்பதினால், இதை மீண்டும் குறைக்கும்படி நிர்வாகம் மத்திய அரசைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. மத்திய அரசின் இறுதியான தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நிர்வாகம் இன்னமும் தனது இறுதி முடிவைத் தெரிவிக்கவில்லை. ஆகவே, சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.